செ.வெ.எண்: 59/மார்ச் நாள்: 26.03.2021

# இராமநாதபுரம் மாவட்டம்

**இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறவுள்ளது.**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் ஜனவரி-2022 பருவத்தில் 8-ம் வகுப்பில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரர்களின் (சிறுவர்களின்) பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் 01.01.2022 அன்று 11 ½ வயது நிரம்பியவராகவும், 13 வயதை அடையாதவராகவும் இருத்தல் வேண்டும். அதாவது அவர்கள் 01.01.2009-க்கு முன்னதாகவும் 01.07.2010-க்கு பின்னதாகவும் பிறந்திருக்கக்கூடாது. இந்த வயது வரம்பில் எந்த தளர்த்தலும் கிடையாது. விண்ணப்பதாரர் மேற்குறிப்பிட்ட இராணுவக் கல்லூரியில் சேர அனுமதிக்கப்படும் பொழுது, அதாவது 01.01.2022-ல் அங்கீகரிக்கப் பெற்ற பள்ளியில் (Recognised School) ஏழாம் வகுப்பு படிப்பவராகவோ அல்லது ஏழாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இதற்கான எழுத்துத் தேர்வு 05.06.2021 அன்றும் நேர்முகத்தேர்வு 06.10.2021 அன்றும் நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கான விண்ணப்ப படிவம் தகவல் தொகுப்பேடு "கமாண்டன்ட்" இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி டேராடூன், உத்ரகாண்ட் அஞ்சல் குறியீட்டு எண்: 248003" என்ற முகவரிக்கு விரைவு அஞ்சல் வாயிலாக எழுத்து மூலம் விண்ணப்பித்து கமான்டன்ட, இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி டேராடூன் அவர்களுக்கு உத்ரகான்ட் டேராடூன், டெல்பவன் ஸ்டேட் ஆப் இந்தியா வங்கி கிளையில் (வங்கி குறியீடு 1576) செலுத்தத் தக்க பொதுப்பிரிவினர் ரூ.600/-க்கான மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர் சாதிச்சான்றுடன் ரூ.555/- க்கான கேட்பு வரைவோலையை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் (இரட்டை பிரதிகளில்) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் சாலை, பூங்கா நகர் சென்னை-600 003 என்ற முகவரிக்கு 15.04.2021 அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேர வேண்டும். மேலும், மற்ற விவரங்களுக்கு இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியின் இணையதளத்தை அதாவது www.rimc.gov.in -ல் பார்க்கவும். மேலும் விபரம் அறிய முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர், இராமநாதபுரம் அவர்களை அலுவலக நாட்களில் நேரிலோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ (04567-230045) தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**